பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 15

புதன்கிழமை
11 டிசெம்பர் 2024

கார்த்திகை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

**அரிசி** விலைமீறலா? அழைக்கவும் **1977!** » 02

**தேங்காய்** அழிவுகளால் சீனாவுக்கு குரங்குகள்! » 07

**அத்துமீறும்** மீனவர்களுக்கு முற்றுப்புள்ளி! » 08

**ரயில்** இயந்திரங்கள் இந்தியாவால் நன்கொடை! » 15

# மர்மக் காய்ச்சல் இன்னும் தீவிரம்!

மந்திகையில் மட்டும் 30 பேருக்கு சிகிச்சை

நேற்றும் ஒருவர் உயிரிழப்பு
மருத்துவத்துறையில் பதற்றம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 11

வடமாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பரவும் மர்மக் காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன், மந்திகை ஆதார மருத்துவமனையில் சுமார் 30 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால், மருத்துவப் பதற்ற நிலைக்குள் வடக்கு தள்ளப்படுகின்றது என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர். 15

## ஒருநாள் காய்ச்சலாயினும் மருத்துவமனையை நாடவும்

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை பொதுமக்களுக்கு அவசர அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11

ஒருநாள் காய்ச்சல் ஏற்பட்டாலும், உதாசீனமாக இருக்காமல் மருத்துவமனையை நாடுமாறு பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. 15

சர்வதேசத்தின் உதவியுடன்

## ஊழல் மோசடியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள்!

அமைச்சர் நளிந்த அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 11

ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக, சர்வதேசத்தின் உதவியுடன் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்தஜயதிஸ்ஸதெரிவித்துள்ளார். மிக் விமானங்கள் மற்றும் எயார் பஸ் ஆகியவற்றின் கொள்வனவின்போது மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், 15

## இந்தியப் பிரதமர் மோடியை சந்திப்பார் ஜனாதிபதி அநுர

கொழும்பு, டிசெ. 11

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், பிரதமர் மோடிக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்த விடயம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவர் பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவாரா என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. இந்த நிலையிலேயே, 15

## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், டிசெ. 11

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றுச் சுழற்சி இன்று வடக்குக் கடற்பரப்பை அண்மிக்கும் நிலையில், 15

## உணவுப் பாதுகாப்புக்கு தனியான குழு அமைப்பு

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தனியான குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. தேசிய உணவு 15

## காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக தமிழர் தாயகத்தில் நேற்றுப் போர்!



‘கண்டறியாத காய்ச்சலெண்டால் சுணங்காமல் போங்கோ ஹொஸ்பிட்டலுக்கு!’



யாழ்ப்பாணம், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 15

ஆசிய அபிவிருத்தி வங்கி

## மின்சாரசபைக்கு 30 மில். டொலர்!

கொழும்பு, டிசெ. 11

இலங்கை மின்சாரசபைக்கு 30 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. 15

## மின்கட்டணத் திருத்தங்கள்: ஜனவரியில் இறுதி முடிவு!

கொழும்பு, டிசெ. 11

மின்கட்டணத் திருத்தம் தொடர்பில், இலங்கை மின்சாரசபை முன்வைத்த பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்படுவதுடன், மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமுள்ள நாடாக இலங்கையை மாற்றுவேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணையின் படி, தனது நிர்வாகத்தின் முழு அமைப்பையும் மாற்றி இலங்கையை ஆரோக்கியமான நாடாக மாற்றுவேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதிய ளித்துள்ளார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தினத்தின் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வினால் 69 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 40 வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 2022ஆம் ஆண்டு 89 வழக்குகளை தாக்கல் செய்து 45 வழக்குகளை மீளப் பெற் றுள்ளன.

இந்த வழக்குகள் வாபஸ் பெறப்படுவதற்கான கார ணங்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாக இருக்கக்கூடாது என்பதற்கான காரணங்களை மக்க ளுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-இ)

## ஊழல் குற்றச்சாட்டு

# இலங்கை முன்னாள் அதிகாரிகளுக்கு அமெரிக்கா பயணத்தடை

கொழும்பு, டிசெ.11

**ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வின் நெருங்கிய உறவினருமான உதயங்க வீரசேகர மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன ஆகியோருக்கு அமெரிக்கா பயணத்தடை விதித் துள்ளது.**

இவர்கள் ஊழலில் ஈடுபட்டுள்ள னர் என்ற குற்றச்சாட்டின் அடிப்ப டையிலேயே அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு இவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அமெ ரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உதயங்க வீரதுங்க இலங்கைக்கு மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது ஊழல் நட வடிக்கையைத் திட்டமிட்டு முன் னெடுத்து அதனால் நன்மைய டைந்துள்ளார் என்று அமெ ரிக்க இராஜாங்கத் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா எயார் லைன்ஸின் முன்னாள் நிறை வேற்று அதிகாரி கபில சந்திரசேன,



இலங்கை எயார்பஸ்ஸை அதிக விலைக்குக் கொள்வனவு செய் வதை உறுதி செய்வதற்காக இலஞ் சம் பெற்றுள்ளார் என்று கூறப்படு கின்றது. (ச-இ)



# சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டது!

கொழும்பு, டிசெ.11

சபாநாயகர் அசோக ரன்வலவின் போலிக் கல்வித் தகுதி தொடர்பில் வெடித்த சர்ச்சையை அடுத்து அவ ரின் கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் சபாநாயகரின் பெயருக்கு முன்னாள் கலாநிதி என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தற்பொழுது இந்த கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் தொடர்பில் அண்மைய நாள்களாக பல்வேறு கருத் துகள் முன்வைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. அதேவேளை தனது கலாநிதிப் பட்டம் தொடர் பில் சபாநாயகர் அடுத்துவரும் நாள்களில் தெளிவுபடுத்தவுள்ளார் என்று அமைச்சர வைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ச-44)

# சபாநாயகர் அசோக பதவி விலகவேண்டும்

கொழும்பு, டிசெ.11

சபாநாயகர் அசோக ரன்வல பதவி விலக வேண்டும் என்று நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற இணையத்தளத்திலிருந்து சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் நீக்கப்பட் டுள்ளது. கலாநிதிப் பட்டம் இல்லாத ஒருவர் அந்தத் தகைமை இருப்பதாகப் போலித் தகவலை சமூகமயப்படுத்தியுள்ளார். இது சபாநாயகர் பதவிக்கு இழைக்கப்படும் இழுக்காகும்.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். எனவே, சபாநாயகரைப் பதவி விலக்கி புதியவர் ஒருவர் சபாநாயகர் பத விக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என் றும் குறிப்பிட்டார். (ச-44)

# மீண்டும் கூட்டமைப்பாக இணைவதற்கு பேச்சுகள்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11



இனம்சார்ந்த விடுதலை யைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் நாம் ஒன்றிணையவேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள். அதற்கமைய முன்னர் ஒன்றாக இருந்த கட்சி களைமீள ஒன்றிணைத்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பாகச் செயற்படலாமா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்குள்ளே ஒற்றுமை இல்லாமையினால் எமது தேசத் தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. அது தொடர்ந் தால் இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.

எனவே இனம்சார்ந்த விடுதலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற வகையிலே நாம் ஒன்றிணையவேண் டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள்- என்றார். (ச-110)



# மண்ணெண்ணெய் மானியம் மாதாந்தம் 9,375 ரூபா

கொழும்பு, டிசெ.11

மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண ணெய் மானியத்தில் அடுத்த 5 மாதங்களுக்கு மாதாந்தம் 9,375 ரூபா வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத் தில் பதிவுசெய்யப்பட்ட விரைவு சிறிய மீன்பிடி படகுகளுக்கு இந்த மானியம் வழங்கப்படவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். மீனவர்களுக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானி யத்தை எளிதாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, எதிர்வரும் காலத்தில் டீசல் மானி யம் லீற்றருக்கு 25 ரூபா வழங்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## அரிசி விலைமீறின் 1977க்கு அழையுங்கள்

கொழும்பு,டிசெ.11

முறைகேடாக அல்லது அதிகப்படியாக அரிசி விற்பனை நடந்தால், நுகர்வோர் ஆணையத்தின் 1977 என்ற எண் ணுக்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. மேலும் நுகர்வோர் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலும் முறைப் பாடு செய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலையில் மோசடி சுற்றிவளைப்பு ஆரம்பம்

கொழும்பு, டிசெ.11

**அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதிகபட்ச விலைக்கு மேல் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் நேற்று முதல் சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

அரிசிக்கான அதிகபட்ச விலையை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அதிகாரசபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார்.

புதிய அரிசி விலை அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில், அதற்கு மேல் அரிசி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




கெடுகிறன் பார் பந்தயம் பிடி எண்டு சனத்தின்ர எதிர்பார்ப்பை பொய்யாக்கிறதும், தங்கட இஷ்டப்படி நடக்கிறதும் வீட்டுக்கட்சிக்கு கைவந்த கலை. இந்தமுறை தேர்தலில் வடக்கில மரண அடி வாங்கின பிறகும் சுவட அந்தக் கட்சிக்காரர்கள் சிலருக்கு புத்தி வரேலை. இன்னும் பழையபடி ஒளிச்சுப் பிடிச்சு விளையாட்டிலையும், நைசா பதவியளை எடுக்கிற பிளானிலையும் ஓடித் திரியினமாம்.

பார்லிமெண்ட் புதிசா கூடேக்குள்ள அங்க இருக்கிற குழுக்களுக்கு புதிசா ஆக்களைப் போடுறவை. அப்பிடி ஒரு குழுதான் அரச கணக்குகள் பற்றிய குழு (கோபா). அந்தக் கோபா குழுவுக்குள்ள ஒவ்வொரு கட்சி சார்பிலையும் ஆக்களைப் போடுவினம். அப்பிடி தங்கட கட்சி சார்பில தானே இருக்கிறதெண்டாலோ, வேற ஆரையும் போடவேணுமெண்டாலோ, அதை அந்தந்தக் கட்சியின்ர நாடாளுமன்றக்குழுவின்ர தலைவர் தான் முடிவு செய்யோணும். வீட்டுக்கட்சிக்கு கிளிநொச்சி வாத்தியார் தானே நாடாளுமன்றக்குழுவின்ர தலைவர் எண்டபடியால, அவருக்குத்தான் வீட்டுக்கட்சியில இருந்து ஆரை கோபா குழுவுக்க போடலாம் எண்டு சொல்லுற அதிகாரம் இருக்கு. ஆனால் அந்தக் குழுவுக்குள்ள போறதுக்கு 'மட்டக்களப்பு மல்லிக்கு'கடும் ஆசை. ஆனால் அதுக்கு கிளிநொச்சி வாத்தியார் உடன்பட மாட்டாரெண்டு நினைச்சு ஆள் ஒரு வேலை பார்த்திருக்கு. கட்சி சார்பில உத்தியோகபூர்வமா எல்லாத்துக்கும் செயலாளர் தானே கையெழுத்து வைக்கிறவர். அதால இந்த விசயத்தை ஆருக்கும் தெரியாமல் கட்சியின்ர பதில்செயலாளரிட்ட காதும் காதும் வைச்சமாதிரி ஒரு கடிதம் வாங்கினால் அலுவல் முடிஞ்சுது எண்டு ஆள் பிளான் போட்டிருக்கிறார். சரி, சத்தியமான டாக்குத்தரிட்ட இதுக்கு கடிதம் வாங்கேக்க, ஒண்டு வாங்கினால் இன்னொண்டு இலவசம் எண்டமாதிரி இன்னொரு கடிதமும் வாங்கியிருக்கிறார்.

எதுக்கு அந்த எக்ஸ்ட்ரா கடிதம்? அதிலையும் விசயமிருக்கு. இப்ப கட்சித்தலைவர்மாரும், எதிர்கட்சித் தலைவரும், கனகாலம் பார்லிமெண்டில இருந்தவையும் தான் முன்வரிசை சீற்றில இருக்கலாம். அதுதான் பார்லிமெண்ட் சம்பிரதாயம். (விசுக்கோத்து எம்.பி. அண்டைக்குச் செய்தமாதிரி மற்றநாள்களில சீற் மாறி இருந்தால், அங்க நிக்கிற படைக்கலச் சேவிதர்மார் செவிட்டில பிடிச்சுக்கொண்டுபோய் வெளியில விட்டிடுவினம்) இந்த முன்வரிசை சீற்றிலையும் மட்டக்களப்பு மல்லிக்கு ஒரு கண் இருக்குது. அதால ரண்டுக்கும் சேர்த்து செயலாளரிட்ட கடிதத்தை வாங்கிக்குடுப்பம் எண்டு அவர் யோசிச்சிருக்கிறார். தேசியப்பட்டியல் எம்.பி. பதவி வந்த புளுகத்தில இருந்த சத்தியமான டாக்குத்தரும், மட்டக்களப்பு மல்லி கேட்ட கடிதங்களை எழுதி சைன் வைச்சும் குடுத்திட்டாராம். மட்டக்களப்பு மல்லியும் ஆருக்கும் தெரியாமல் அந்தக் கடிதங்களை பார்லிமெண்டில குடுத்திட்டு, ஒண்டுமே தெரியாத அப்பாவிமாதிரி இருந்திருக்கிறார். ஆனால் கோபாவுக்கும்,முன் சீற்றில இருக்கிறதுக்கும் நாடாளுமன்றக் குழுத் தலைவரின்ர கடிதம் வேணுமெண்டதால, கிளிநொச்சி வாத்தியாரிட்ட இதைப்பற்றி பார்லிமெண்ட்காரர் கேக்கத்தான் விசயம் வெளியில வந்திருக்கு.

பிறகு கட்சியின்ர எம்.பி.மார் கூட்டத்தில 'நான் செய்தது பிழைதான். ஆனால் என்னை கோபாவில இருக்க இடம் விடுங்கோ' எண்டு மட்டக்களப்பு மல்லி அழாக்குறையாக் கேக்க, கிளிநொச்சி வாத்தியாரும் விட்டுக்குடுத்திட்டாராம். இப்பிடி பதவியளுக்கு உள்ளால குழி பறிக்கிற வேலை செய்யிற ஆக்களும், பார்லிமெண்ட் அலுவல்களுக்கு தன்ர கையெழுத்து செல்லுபடியாகுமோ இல்லையோ எண்டே தெரியாத செயலாளரும் இருக்கிற கட்சி என்னெண்டு உருப்படும்?

padsi@uthayan.com - பட்சி

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.11

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் வேரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-45-27)

# பால்நிலை விழிப்புணர்வுகள் கிளிநொச்சியில் செயற்றிட்டம்

கிளிநொச்சி, டிசெ.11

கிளிநொச்சி மற்றும் தருமபுரம் பொலிஸ் நிலையங்களில் பால்நிலை வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை விழிப்புணர்வுச் செயற்பாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான பால்நிலை வன்முறையினை இல்லாதொழிக்கும் நோக்கில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உளவளத்துணை ஆலோசனைகளை வழங்கும் விதத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் தருமபுரம் பொலிஸ் நிலையத்திலும் குறித்த செயற்பாடு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-45-113)



# பிடியாணை நபரை பிடிக்கும்போது குழப்பம்

மேலும் இருவர் கைது

வவுனியா, டிசெ.11

வவுனியா நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் ஒருவரை கைது செய்த வேளை அங்கு குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து மேலும் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வவுனியா நீதிமன்றுக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிடியாணை பிறப்பித்த நபரை கைதுசெய்ய முற்பட்ட போது அங்கு குழப்பநிலையை ஏற்படுத்தி கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டிலேயே ஏனைய இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்த இருவரையும் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-25, 18)



# அநாதரவற்ற நிலையில் யாழில் மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம், வடமராட்சி பருத்தித்துறை கிராமக்கோடு பகுதியில் அநாதரவாக நின்ற மோட்டார்சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு சத்தமொன்று கேட்டநிலையில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே அச்சத்தில் இருந்து விடிந்ததும் சென்று பார்த்தபோது அங்கிருந்த மாதா சுருவ மதிலுடன் மோதிய நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்பட்டுள்ளது. இதுகுறித்து அந்தப் பகுதி மக்களால் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-27)

# கஞ்சாவுடன் ஒருவர் மூளாயில் கைது

யாழ்ப்பாணம், டிசெ.11

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் வேரம் பகுதியில் 3 கிராம் கஞ்சாவுடன் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

குறித்த இளைஞரிடம் வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலைமகள் பிறீமியர் லீக் வெற்றிக்கிண்ணம் அறிமுகம்



யாழ்ப்பாணம், டிசெ. 11
உதயன் பத்திரிகையின் பிரதான ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில், கலைமகள் பிறீமியர் லீக்கின் வெற்றிக் கிண்ண அறிமுகவிழா காரைநகரில் அமைந்துள்ள காரை சலஞ்சர்ஸ் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பிறீமியர் லீக்கில் இறுதி சுற்றுக்குத் தெரிவான சுழிபுரம் றைனோஸ் மற்றும் வாராகி சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர்களுக்கு உதயன் குழுமத்தலைவரால் வெற்றிக் கேடயம் அறிமுகப்படுத்தப்பட்டது. நிகழ்வில் காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர், கலைமகள் விளையாட்டுக்கழகத்தின் போக்கர் பஞ்சலிங்கம், சுழிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பரந்தாமன், கலைமகள் விளையாட்டுக் கழகத்தினர், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 125)

## சமயதீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.11
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.
தொடர்ந்து பி.ப. 2.30மணிக்கு சர்வாலய தீப உற்சவமும், பி.ப. 3.30 மணிக்கு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம் பெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ரி-10)



## கிளிநொச்சி மருத்துவமனையில் புதிய பணிப்பாளர் கடமையேற்பு

கிளிநொச்சி, டிசெ,11
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் பி. வெறவத்தே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. வினோதன் புதிய பணிப்பாளரை வரவேற்றார். (ச-25, 113)



## புதிய பொலிஸ் அத்தியட்சகர் கிளிநொச்சியில் பதவியேற்பு

கிளிநொச்சி, டிசெ,11
கிளிநொச்சி பிராந்தியத்துக்கான புதிய பொலிஸ் அத்தியட்சகராக சிசிர பெத்திர தந்திரி இரணைமடுவிலுள்ள பொலிஸ் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.
இவர் இதற்கு முன்பு தங்காலை பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியிருந்தார். ஏற்கனவே இங்கு கடமையாற்றிய உபுல் செனவிரத்ன தங்காலை பிராந்தியத்துக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 113)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே பரஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும்.

**இடபம்:** சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு அவ்வப்போது மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தை வழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு வெளியூரில் உள்ள கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்** : மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையில் பரபஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார்.

**மகரம்:** காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க அதிகாரிகளின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக் கூடும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தை களில் நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவ சமூகத்தைக் காப்போம் முல்லைத்தீவில் நடைபவனி

**முல்லைத்தீவு, டிசெ.11**


**'மீனவ சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதன்மூலம் கண்ணியமான வாழ்வுக்கு எம்மை அர்ப்பணிப்போம், உணவு இறையாண்மையை உறுதிசெய்வோம்' என்னும் தொனிப் பொருளில் முல்லைத்தீவில் நேற்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்த நடைபவனியானது, முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரை துறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபம் வரை இடம்பெற்றது.

குறித்த நடைபவனியில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்தியன் இழுவைமடி ஆக்கிரமிப்பை நிறுத்துதல், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளை முற்றாகத் தடைசெய்தல், கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல், சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பண்ணை வளர்ப்புத் திட்டங்களை நிறுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பியவாறும், பாதாகைகளைத் தாங்கியவாறு நடைபவனியில் ஈடுபட்டனர்.

இதில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் 16 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-246)



## பச்சை மிளகாய் கிலோ 1000 ரூபா

சாவகச்சேரி, டிசெ.11

வெள்ளத்தால் பெருமளவு பயிர்கள் அழிவடைந்ததைத் தொடர்ந்து, தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் பச்சை மிளகாய் கிலோ ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

கனமழையால், மேட்டு நிலங்களில் பயிரிடப்பட்ட மிளகாய் கன்றுகளிலுள்ள பூக்கள் கொட்டியதன் காரணமாகவே மிளகாய் உற்பத்தி குறைவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-25, 9)



## கேக் விலை குறையாது

கொழும்பு, டிசெ.11

பண்டிகைக் காலங்களில் கேக் விலையைக் குறைக்கமுடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கேக் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களின் விலை மற்றும் வரி அதிகமாக இருப்பதால் கேக் தயாரிப்பில் அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## அரிசிக்கு நிர்ணய விலை வெளியானது வர்த்தமானி

கொழும்பு, டிசெ.11

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் அடங்கிய வர்த் தமானி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அரிசி விற்பனை தொடர்பான சில்லறை விலை மற்றும் மொத்த விற்பனை விலை விவரங்கள் இந்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு நாட்டு அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் நாட்டு அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 240 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிக பட்ச சில்லறை விலை 230 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சட்டவிரோத மரக்கடத்தல்; மேல் வெடி வைத்துக் கைது

யாழ்ப்பாணம், டிசெ.11

முல்லைத்தீவில் சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவரை மேல் வெடி வைத்து வனவளத் திணைக்களத்தினர் கைதுசெய்துள்ளனர்.

முல்லைத்தீவு மண்ணகண்டல் ஒதுக்கக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக பாலை மற்றும் முதிரை மரக்குற்றிகள் வெட்டப்பட்டு ஏற்றப்படுவதாகத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குத் திணைக்களத்தினர் விரைந்தனர்.

அங்கு சந்தேகநபர் பட்டாரக வாகனத்தில் தப்பிச் செல்ல முயன்ற நிலையில் திணைக்களத்தினர் மேல் வெடி வைத்து வாகனத்தைக் கைப்பற்றியதுடன் 21 வயதான சந்தேகநபரையும் கைது செய்தனர். (ச-125)





## ஒதுக்கக் காட்டினுள் நுழைந்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.11

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதுக்கக் காடுகளில் ஒன்றான உடையார்கட்டு பாவாடைக் கல்லாறு ஒதுக்கக் காட்டில் நேற்றுமுன்தினம் அத்துமீறி உள்நுழைந்த ஒருவர் வனவளத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வனவளத் திணைக்களத்தினர் காட்டினுள் நடமாடித் திரிந்த இளைஞர் ஒருவரை விசாரணை செய்தபோது மரங்களை வெட்டுவதற்கு அத்துமீறிக் காட்டினுள் நுழைந்தமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



## மருத்துவர்களின் ஓய்வெல்லையை நீடிக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ.11

மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆக நீடிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொது நிர்வாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் அலோக பண்டார குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வாரம் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# டிஜிற்றல் 'லைசென்ஸ்' அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ.11

டிஜிற்றல் சாரதி அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

டிஜிற்றல் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்வரை தற்போதைய சாரதி அனுமதிப்பத்திரம் நடைமுறையில் இருக்கும் என்றும் அமைச்சரவையில் தீர்மானிக் கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஸ்மாட் சாரதி அனுமதிப்பத்திர நடைமுறை ஆரம்பிக் கப்பட்டுத் தற்போது 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிற்றல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது சிறந்தது என்று அரசாங்கம் கண்டறிந்துள்ளது.


அந்தவகையில் டிஜிற்றல் சாரதி அனுமதிப்பத்திரத்தைத் துரிதமாக வழங்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 02 . 1932

உதிர்வு 10 . 12 . 2016



**இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி - ஏகாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

குடும்பத்தினர்

(CS/56878) J-1

## முக்கிய அறிவித்தல்

**அடகு நகை விற்பனை அறிவித்தல்**
**ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி**

01.03.2023 ஆம் திகதி தொடக்கம் 31.12.2023 ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை 31.01.2025 ஆம் திகதிக்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் 31.01.2025 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**இல.31C ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)**
**021 221 7287, 076 636 1238**

(CS/56876) J-1


# செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம், நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள நினைவாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, மு.ப. 11 மணிக்கு 'ஈழத்துச் சித்தர்க ளும், திருவண்ணாமலையும்' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சிவநாதன் சொற்பொழிவாற்றவுள்ள தாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (ச-25)

# சுழிபுரத்தில் இன்று பாரதியின் பிறந்ததினம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 143 ஆவது பிறந்ததின விழா இன்று புதன்கி ழமை காலை 10 மணிமுதல் யாழ். சுழி புரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தி யமனை நூலகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் தரம் 5 முதல் தரம் 13 வரை யான மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி இன்று மாலை 4.30 மணி வரை இடம்பெறும். பங்குபெறுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றி தழ்கள் வழங்கப்படும். மாணவர்களால் வெளிப்படுத்தப்படும் சிறந்த கட்டுரைகள் பாரதி சிறப்பிதழாக வெளிவரும் சிறு பொறி7 இதழில் பிரசுரமாகும். அத்துடன் மாணவர் கௌரவிப்பும் இடம்பெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (ம-66)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# பொது அறிவித்தல் - 2025

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

01. **ஆதன வரி செலுத்துதல்**
2025ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை), மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்), பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தவும். மேலும், ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

02. **ஆதனப் பெயர்மாற்றம் செய்தல்**
சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு, ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும், ஆதனத்தில் பௌதிக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

03. **காணி உப பிரிவிடுதல் / ஒருங்கிணைத்தல்**
பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போதும், ஆதனங்களை ஒன்றாக்கும் போதும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை / ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளவும்.

04. **கட்டட அனுமதி வழங்கல்**
(1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.
(2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் காலநீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
(3) அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக சபை உப அலுவலகத்திற்கு ஊடாக விண்ணப்பித்து குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
(4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மல சலகூடங்கள் குழாய்க்கிணறுகள் என்பனவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

05. **வீதி ஒழுங்கைப்பேணல்**
பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் அலங்கார சிமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

06. **வியாபார அனுமதி / வியாபார வரி - 2025**
இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், முச்சக்கர வண்டித்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர், தொழிற்சாலைகள் மற்றும் சேவை வழங்குநர்கள் 2025ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான / வியாபார வரி செலுத்துவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2025ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2025ஆம் திகதிக்குள் செலுத்தி 2025ம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை / வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. **இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை**
எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

08. **துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக வரி**
2025ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களுக்கான வரியை மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்தவும்.

09. **சூழல் பாதுகாப்பு உரிமம்**
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் கிளையில் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

10. **விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2025ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2025ஆம் திகதிக்கு பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

11. **திண்மக் கழிவுகளை அகற்றுதல்**
வீடுகள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக் குரியகுற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது நாளாந்த சமையல் கழிவுகளை உரிய வகையில் தரம் பிரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கழிவகற்றல் நேர அட்டவணைக்கு அமைவாக வழங்கி சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள் அல்லது கழிவுகளை தரம்பிரித்து மானிப்பாய் / பண்டத்தரிப்பு / கல்லுண்டாய் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையங்களில் நேரடியாக கையளிக்க முடியும். அத்துடன், மேலதிகமான கழிவுப் பொருட்களைத் தரம் பிரித்து, பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்தி அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

12. **நீர்வழங்கல் சேவை**
பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உரிய கட்டணத்தை செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

13. **கனரக வாகன சேவை**
திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser); சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். மேலும், வீதி உருளை, பக்கோ லோடர், டிப்பர் என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

14. **கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்**
பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

15. **பொதுப்பயன்பாட்டு சேவைகள்**
சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடைய முடியும்.

16. **மயானங்கள்**
பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சபைக்குரிய சுடுகாடுகளில்/ இடுகாடுகளில் பூதவுடலினை தகனம் / நல்லடக்கம் செய்வதற்காக உரிய கட்டணத்தினை எமது உப அலுவலங்களில் செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளவும்.

❀ இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**சீ.சபேசன்.**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்**
**2024.12.10**

**தொலைபேசி இலக்கங்கள் :**

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | - 021 225 6647 |
| மானிப்பாய் பட்டினம் | - 021 225 5382 |
| மானிப்பாய் கிராமம் | - 021 225 5379 |
| பண்டத்தரிப்புப் பட்டினம் | - 021 225 2021 |
| பண்டத்தரிப்பு கிராமம் | - 021 225 2022 |

(CR/43864) J-1


# செல்வம், கஜேந்திரகுமார் எம்.பி.க்கள்
# அரசமைப்புத் தொடர்பில் நேற்றுக் கலந்துரையாடல்

மன்னார், டிசெ. 11

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையில் நேற்று இரவு சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் கஜேந்திரகு மார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது: அரசாங்கம் புதிய அரசமைப்பைக் கொண்டுவர உத்தேசித்துள்ள சூழ்நிலை யில் அதை நாடாளுமன்றத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் இந் தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுட னும் இது தொடர்பில் நாம் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட் டத்தை உள்வாங்கி, தமிழரசுக் கட்சி, ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் மக்கள் முன்னணி, சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதி களுடன் விரைவில் இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நடத்தப்படும் - என்றார். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தட்டுப்பாடு திட்டமிட்ட சதியா?

இலங்கையில் மீண்டும் வரிசை யுகம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இம்முறை ஏற்பட்டிருக்கும் பொருள்களுக்கான வரிசை வித்தியாசமானது. கடந்தகாலங்களில் இறக்குமதிப் பொருள்களான எரிபொருள், எரிவாயு போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு மக்கள் வரிசையில் காத்திருக்கவேண்டி ஏற்பட்டிருந்த நிலையில், இப்போது உள்நாட்டில் விளையும் தேங்காய், அரிசி, முட்டை போன்றவற்றுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றமை பல கோணங்களில் சிந்திக்க வேண்டிய விடயமாக மாறியிருக்கின்றது.

கடந்தகால அரசாங்கங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகளும் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைவதற்குப் பிரதான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. கடந்தகாலங்களில் உர இறக்குமதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் தாக்கம் இப்போதும் உணரப்படுகின்றது. நோய்த்தாக்கம் காரணமாக தென்னை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், தெங்குச் செய்கைக்கான உரம் சரியாகக் கிடைக்காததும் தெங்கு உற்பத்தியின் வீழ்ச்சியின் ஒரு காரணமாக இருக்கின்றது. அதைப்போன்று அரிசி உற்பத்தியும் சரியான முறையில் உரம் கிடைக்காதமை, இயற்கை இடர் ஆகியவற்றால் குறைந்திருக்கின்றது. கோழித் தீவன இறக்குமதியில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் முட்டை உற்பத்தியில் தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றன. கடந்த காலங்களில் அரசாங்கம் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யப் பின்னடித்திருந்தமையும் இப்போது அரிசித் தட்டுப்பாடுக்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. எதிர்பாராத ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அநுரகுமார அரசாங்கம் அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கின்றது. ஆட்சியமைத்த ஒரு மாதகாலத்துக்குள் தேங்காய், அரிசி, முட்டை என்பவற்றின் விலைகள் அதிகரித்திருக்கின்றன. இவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சில நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தாலும் அவற்றின் விலைகள் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. உள்நாட்டில் உற்பத்தியாகும் குறித்த மூன்று பொருள்களுக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு - நெருக்கடிக்கு- பின்னால் அரசியல் காரணங்கள் - இலாபமீட்டும் முனைப்புகள் -இருக்கலாம் என்று எழும் சந்தேகங்களையும் மறுக்க முடியாது. ஆனால் வெறுமனே காரணங்களைக்கூறிக் கடந்துவிடாது அந்தக் காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளைக் காணவேண்டியது கட்டாயமானது.

தேங்காய், முட்டை, அரிசி போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு என்று கூறப்பட்டாலும் அவை சந்தையில் இல்லாமல் போகவில்லை. சந்தையில் அவை காணப்பட்டாலும் அவற்றின் விலைகள் வெகுவாக அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. சந்தையில் பொருள்கள் இருக்கும் நிலையில், தட்டுப்பாடு என்ற காரணத்தை முன்னிறுத்தி அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை இந்தத் தட்டுப்பாடு செயற்கை முறையில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் ஆராயத் தூண்டுகின்றது. உற்பத்தியாளர்களும், அரிசி ஆலை உரிமையாளர்களும் தற்போதுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி இலாபமீட்டவோ -அல்லது அரசியல் காரணங்களுக்காக நாட்டில் நெருக்கடியை உருவாக்கவோ முயற்சிப்பார்களானால் அதைச் சரியான முறையில் இனங்கண்டு கையாளவேண்டியது அரசாங்கத்தின் முன்னுள்ள பிரதான கடமையாகின்றது.


இந்தப் பற்றாக்குறைப் பிரச்சினையைக் கையாள வேண்டிய முழுப்பொறுப்பையும் அரசாங்கத்தின் மீது தள்ளிவிட்டு மக்கள் அரசாங்கத்தைக் குறைகூறுவதும் ஏற்புடையதல்ல. பற்றாக்குறையாக உள்ள பொருள்களை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதை நாட்டு மக்களும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்துச் செயற்பட்டால் மட்டுமே செயற்கைத் தட்டுப்பாடுகளை உருவாக்கி கொள்ளை இலாப மீட்டும் முதலாளிகளின் திட்டத்தை உடைக்க முடியும். இந்த நெருக்கடிகள் என்ன காரணத்துக்காக உருவாக்கப்பட்டாலும் அவை இறுதியில் சாதாரண மக்களின் வயிற்றிலேயே அடிக்கும். அதைப் புரிந்துகொண்டு மக்களும் தங்களை மாற்றிக்கொண்டு சிந்தித்தால் மட்டுமே இவ்வாறான நெருக்கடிகள் எதிர்காலத்தில் உருவாவதைத் தடுக்க முடியும். முன்னோர்களைப் போன்று எமக்கான சில உற்பத்திகளை நாமே மேற்கொள்வது வரிசைகளில் காத்திருக்கும் நிலைமையை மாற்றுவதற்கான ஒரு வழி என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கை என்பது ஒரு சந்தர்ப்பம் – நழுவ விடாதீர்கள், ஒரு கடமை – நிறைவேற்றுங்கள், ஒரு இலட்சியம்– சாதியுங்கள், ஒரு சோகம்– தாங்கிக்கொள்ளுங்கள் ஒரு போராட்டம்–வென்றுகாட்டுங்கள்.

- அப்துல்கலாம்-




# 'பராட்டே' சட்ட இடைநிறுத்தம் 3 மாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, டிசெ.11

**கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து சொத்துகளைப் பெறுவதற்கும் அவற்றை ஏலம் விடுவதற்கும் நிதி நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கிய 'பராட்டே' சட்டத்தின் இடைநிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அதன்படி 2025 மார்ச் 31 வரை நீட்டிக்க அரசாங்கம் தீர்மானம் செய்துள்ளது.
சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் கடனை செலுத்தத் தவறியதால், அவர்களின் சொத்துகளை ஏலம் விடுவது இந்த ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.
இந்தநிலையிலேயே அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ, 2025 மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை பராட்டே சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ச-இ)

## ஊடகவியலாளர்கள் படுகொலை அரசாங்கத்தால் விசாரணைகள்

கொழும்பு,டிசெ.11
படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்னிற்கிறது. அந்தவகையில் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைக்கும். எதிர்வரும் காலங்களில் நாட்டில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

## தேசியப்பட்டியலில் பைசர் முஸ்தபா

கொழும்பு, டிசெ.11
புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக பைசர் முஸ்தபா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன. ஒரு ஆசனத்துக்கு ரவி கருணாநாயக்க முன்னர் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சீனாவுக்கு குரங்குகள்; திட்டத்தைப் பின்பற்றுக

கொழும்பு,டிசெ.11
ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிலுள்ள மிருகக்காட்சி சாலைகளுக்கு வழங்குவதற்கு தம்மால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை தற்போதைய அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்று முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். நாட்டில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. வருடாந்தம் 200 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களை குரங்குகள் நாசமாக்கின்றன. எனவே, இந்நிலைமையை கட்டுப்படுத்த ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிலுள்ள மிருகக்காட்சி சாலைகளுக்கு வழங்கும் திட்டம் நன்மை பயக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## சா/தரப் பரீட்சைக்கான விண்ணப்பகாலம் நிறைவு

கொழும்பு, டிசெ.11
2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறை வடைந்ததாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணப்பதாரிகள் இணைய வழி முறையில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க கடந்த நவம்பர் 5 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - கார்த்திகை - 27
12.12.2024
சுபநேரம் : 07.50 - 09.20
ராகுகாலம் : 01.50 - 03.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.11
கோப்பாயில் 20 லீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத் தில் முற்படுத்தி மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-45-125)

### தேவை

நீர்வேலி, கோப்பாய், இருபாலை பகுதியில் வீடு காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: Whats App:
076 311 9485, 076 050 3863

## துயர் பகிர்வு




எமது பாடசாலையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி அபர்ணா தினேஷ்**
அவர்களின் தாயார்
**திருமதி யோ.விமலாதேவி**
அவர்களின் இறுதிக்கிரியை பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நேற்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நட்புறவுக்கழகம்**
**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி**
CS/2015) J-1

## மரண அறிவித்தல்

[ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ]



**அமரர் சின்னத்தம்பி தில்லைநாதன்**
கலாபூஷணம், கலைஞானசுடர், கலைக்குரிசில்
(ஓய்வு பெற்ற C.T.B. நடத்துநர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தில்லைநாதன் அவர்கள் நேற்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற நாகராசா, நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கெங்காதரன்,ஜீவராணி, சசிரேகா, சுபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மறஜி, சிறிசிவானந்தம், வதனமோகன், நிதர்ஷிணி ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்திகா, துர்ஷனா, மதுர்ஷானனன், உமாவேந்தன், குருவர்ணன், அகர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் கிதுன், லிசாரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11.12.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தாவில் லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 605 5514
077 195 8726

இந்தியப் பயணத்தின்போது

# அத்துமீறும் மீனவர்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்!

## அநுரவிடம் யாழ்.மீனவர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,டிசெ.11**

**இந்தியா செல்லும் எமது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்கள் தொடர்பில் இந்தியப் பிரதமருடன் பேசி முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட கூட்டுறவு சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். இந்திய அத்துமீறிய இழுவை படகுகளினால் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முதல் பயணமாக எதிர்வரும் வாரம் இந்தியா செல்ல உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்த விவகாரத்துக்கு இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடி ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-20,27)

வவுனியாவில்

# அனுமதிக்கு முரணான கட்டடம் நகரசபையால் நடவடிக்கை

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் பீட்சா விற்பனை நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கட்டடத்தின் உரிமையாளருக்கு எதிராக வவுனியா நகரசபையால் நோட்டிஸ் ஒட்டப்பட்டுள்ளது.
அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
நகரசபைக் கட்டளைச்சட்டங்களின் பிரகாரமும், நகரப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் கட்டடங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் வவுனியா நகரசபையிடம் முறையான அனுமதி பெற்றிருக்கவேண்டும். எனினும் குறித்த ஆதனத்தில் நகரசபையால் கடந்த 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு முரணாக கட்டடம் அமைக்கப்பட்டு இயங்குவதால் அது தொடர்பாக திருத்திய வரைபடத்துக்கான கட்டட அனுமதி உள்ளிட்ட சில ஆவணங்களை நகரசபைக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.
எனினும் அது சமர்ப்பிக்கப்படாத நிலையில் மீளவும் 7 நாள்களுக்குள் அந்த ஆவணங்களை வழங்குமாறு கடந்த 5 ஆம் திகதி சபையின் செயலாளரால் நோட்டிஸ் ஒட்டப்பட்டது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத்தவறின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தச்சட்டங்களின் பிரிவுகளை மீறி நகரசபையின் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக கட்டடம் அமைத்து செயற்படுவதாகக் கருதி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (ச-45-110)



# கடற்றொழில் அமைச்சர் விவசாயிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11
தென்மராட்சி வரணி, நாவற்காடு கிழக்கு வெளி வயல் பகுதியில் வெள்ள நீர் வடிந்தோடாது தேங்கி நிற்பதாகக் கூறி அந்தப்பிரதேச விவசாயிகளால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய இராமலிங்கம் சந்திரசேகர் விவசாயிகளை அழைத்து யாழில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் இந்த விடயம் தொடர்பில் திங்கட்கிழமை கலந்துரையாடினார்.
இதன்போது வயல் வெளியில் வெள்ள நீர் தேங்காது வடிந்தோடும் வகையில் தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்தார். (ச-25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.12.2024
புதன்கிழமை
புதன் பொய்கை

மற்றவர்களுக்கு
கொடுப்பதனால்
யாரும் எப்போதும்
ஏழையாகி
விடுவதில்லை.
- ஆன் ஃபிராங்க்





# பெங்கால் புயலால் பாதிக்கப்பட்ட நாற்று மேடைகள்

இரா.மயூதரன்

பெங்கால் புயலால் ஏற்பட்ட கன மழை காரணமாக வடமராட்சி பொலிகைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாற்று மேடை செய்கை பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதன் காரணமாக லட்சக் கணக்கில் இழப்பு ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையை மிரட்டிய 'பெங்கால் புயல்' எதிர்பார்க்கப்பட்ட வழித்தடத்தில் இருந்து திசைதிரும்பி பயணித்து வடக்கு மாகாணத்தின் மீது கருணை காட்டியிருந்தபோதிலும் வடக்கில் பல்வேறு பாதிப்புகளினூடாக ஆழமான தடத்தை பதித்தே சென்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையில் வடமராட்சிப் பகுதியிலும் பலத்த காற்றுடன் மழைப்பாதிப்பு அதிகமாக இருந்தது. இதன்காரணமாக பொலிகை நாற்றுமேடைச் செய்கை பலத்த சேதத்தை சந்தித்துள்ளது.

தீவகம் உள்ளிட்ட யாழ். குடாநாட்டுக்கான புகையிலைக் கன்றுகளை உற்பத்திசெய்து விநியோகிக்கும் மையமாக பொலிகை மண் திகழ்ந்து வருகிறது. 30 - 40 வருடங்களுக்கு மேலாக பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டுவரும் நாற்று மேடைச்செய்கை, பொலிகண்டிப் பிரதேசத்தில் உள்ள பல குடும்பங்களை வாழவைத்து வருகின்றது.

பொலிகை மண்ணின் வரப்பிரசாதமாகக் காணப்படும் நாற்றுமேடைச் செய்கை, இங்குள்ள பல குடும்பங்களின் வாழ்வாதாரமாகக் காணப்படுகிறது. இம்முறை பெங்கால் புயல் காரணமாக நாற்றுமேடை செய்கையாளர்களுக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் மீண்டும் ஒரு புயல் தொடர்பான அபாய நிலை இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளமை இழப்புகள் மேலும் அதிகரிக்கும் நிலையை ஏற்படுத்தியிருப்பதாக நாற்று மேடைச் செய்கையாளர் பொன்னம்பலம் ஜதீஸ் கவலை தெரிவித்துள்ளார். வழமையாக புரட்டாசி மாதத்தில் நாற்றுமேடைச் செய்கையை ஆரம்பித்துவிடுவோம், தீவகப் பிரதேசங்களில் இருந்து 30 தொடக்கம் 35 நாள்களான நாற்றுகளை வாங்கிச் செல்வார்கள். யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள விவசாயிகள் சுமார் 50 நாள்களான நாற்றுகளை வாங்கிச்சென்று புகையிலைச் செய்கையை மேற்கொள்வார்கள்.

இதற்கேற்றவாறு இடைவெளியில் நாற்றுமேடை செய்கையை திட்டமிட்டு மேற்கொள்வோம். இவ்வாறு சுமார் ஆறு மாதகாலம் தொடர்ச்சியாக நாற்றுமேடைச் செய்கையினை மேற்கொண்டு புகையிலை நாற்றுகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்வோம்.

இந்தமுறை பெங்கால் புயலினால் ஏற்பட்ட கனமழை காரணமாக நாற்றுமேடைகள் பலத்த சேதமடைந்துள்ளன. வழமையாக மழைக்கு முகம்கொடுக்கும் வகையில் முன்னேற்பாடுகளுடனே நாற்றுமேடைகளை அமைப்போம். ஆனால் இம்முறை வழமைக்கு அதிகமாக கனமழை பெய்ததன் காரணமாக கணிசமான நாற்றுகள் அழிவடைந்துள்ளன. அத்துடன் இலைகளில் பங்கஸ் பரவல் ஏற்பட்டு செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் பெங்கால் புயலால் ஏற்பட்டுள்ள அழிவைப் பதிவுசெய்கின்றார்.

இவ்வாறு நேரடிப் பாதிப்புகள் ஒருபக்கம் என்றால், தப்பிப்பிழைத்த நாற்றுகளை விற்பனை செய்யமுடியாத நிலை இழப்பின் தாக்கத்தை அதிகப்படுத்தும் என்ற கவலையையும் நாற்று மேடையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதாவது, மீண்டும் ஒரு வெள்ளப் பேரிடர் ஏற்படும் என்ற அச்ச நிலைமையை மோசமாக்கியுள்ளது. இதே நிலை நீடித்தால் அவை வீணாகிவிடும்.

அதுமாத்திரமல்ல படிமுறை அடிப்படையில் அடுத்த பருவ நிலைக்குத் தகுந்தவாறு இடைவிட்டு துவப்பட்ட விதைகள் வளர்ந்து வரும் நிலையில் முதல் பருவ நாற்றுகள் பிடுங்கப்படாது காணப்படுவதனால் அவையும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

நாற்றுமேடை அழிவு நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில் தொடரும் வெள்ள நிலையும் அடுத்த புயல் தொடர்பில் வெளியாகிவரும் தகவல்களும் இருக்கின்றநாற்றுகளை தன்னும் விற்பனை செய்யமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பொன்னம்பலம் ஜதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனுக் ஷி ஸ்ரீகாந்தன்
*இரண்டாம் வருடம்*
*ஊடகக் கற்கைத்துறை*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*



# மட்டக்களப்பின் பாரம்பரியமான கொம்பு முறி விளையாட்டு

நவீன உலகின் பல்வேறு பரிமாணங்களுக்கு உட்பட்டுச் செல்லுகின்ற இன்றைய காலத்தில், ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பாரம்பரிய சடங்குகளினை தலைமுறை தலைமுறையாகப் பேணிப் பாதுகாத்து வருகின்ற தன்மையைக் காணமுடிகிறது. இலங்கைத் தமிழர்களிடையே பாரம்பரிய சடங்குகளை இன்றும் பேணிப் பாதுகாத்து தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டுவருவதில் மட்டக்களப்பின் பங்கும் அளப்பரியது. இதில் வந்தாறுமூலை எனப் போற்றப்படும் இடத்தில் 'கொம்பு முறி' விளையாட்டினை மழை வேண்டி நடத்தப்படுகின்ற போக்குக் காணப்படுகிறது. இவை அந்தச் சமூகத்தின் அடையாளத்தினை வெளிப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. இந்த விளையாட்டு வருடா வருடம் இடம்பெறுவதில்லை. குறிப்பாக மழையற்றுக் காணப்படும் சந்தர்ப்பங்களில் விவசாயிகள் மழை வேண்டி இந்த விளையாட்டை நிகழ்த்துவர்.

**உருவான கதை**

ராமநாட்டின் சிற்றூரான கிடாக்குழியில் இருந்து கதிர்காமத்துக்கு யாத்திரியாக வந்த சித்தர் ஒருவர், இலங்கைத் தீவின் கிழக்கே உள்ள முந்தன்குமாரவெளி வேரோடியலைக்கு வடக்கே உள்ள பாதை வழியாக உள்ள வனாந்தரமாகவும், பருவங்களுக்கு கனிதரும் மரங்களாலும், கொடிகளாலும் சூழப்பட்டு வெயில் உள்ளே நுழையா வண்ணம் குளிர்ச்சியும், மிக்க சோலையிலே நிர்முகநாகலிங்கேஸ் வரை வணங்கிவிட்டு இளைப்பாறிக் கொண்டிருந்தபோது அங்கு ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த ஆயச் சிறுவர்கள் 'நீண்ட தலை முடியுடன் இருக்கும் நீங்கள் யார்' என வினாவினர். அப்போது சித்தர் தன்னைப் பற்றி சிறுவர்களிடம் கூறினார். சிறுவர்கள் சித்தரை அவரின் ஊரின் பெயரை கொண்டு கிடாக்குழியார் என்றே அழைத்தார்கள்.

சித்தர் ஓய்வெடுக்கும் தருணங்களில் ஆயச் சிறுவர்களுக்கு கொம்பு விளையாட்டினை பயிற்றுவித்தார். ஆயச்சிறுவர்கள் கொம்பு விளையாட்டை மிக ஆர்வத்துடன் விளையாடி மகிழ்ந்தார்கள். அவர்கள் கொம்பு விளையாட்டைப் பற்றி சித்தரிடம் விளக்கம் கேட்கையிலே கண்ணகி வழிபாடு பற்றி எடுத்துக் கூறினார்.

கண்ணகை அம்மனை வேண்டி வழிபட்டால் வரட்சிக்காலங்களில் ஏற்படும் அம்மை, கொப்பளிப்பான், கண்நோய், போன்ற 'அம்மன் கோதாரி' நோய்கள் பரவாமலும் அம்மனுக்கு விழா நடத்தினால் அவள் மகிழ்சியுற்றால் மழை பொழியுமெனவும், கோதாரிகள் குறையும் எனவும் கூறினார். ஆயச்சிறுவர்கள் சித்தர் கூறிய செய்திகளை தங்களது பெற்றோரிடம் தெரிவித்தனர். ஊரில் உள்ள அனைவரும் சித்தரை சந்திக்கச் சென்றனர். தன்னை நாடி வந்த மக்களிடம் சித்தர் 'இவ்விடத்தில் கண்ணகி உறைவாள், ஓர் கன்னிப் பெண்ணினால் கண்ணகி சிலை கொண்டு வரப்பட்டு கண்ணகிக்குரிய சடங்குகள் செய்யவேண்டும்' எனக் கூறினார். ஊரில் உள்ள வனப்பகுதியில் கண்ணகி அம்மனை வேண்டி காளையர்கள் கண்ணகி கட்சி, கோவலன் கட்சி என்று இரண்டு பிரிவாகப் பிரிந்துகொண்டு வளைந்த தடிகள் இரண்டினை ஒன்றோடு ஒன்று கொழுவி இழுத்து முறித்து விளையாடி கண்ணகை கட்சிக்கு வெற்றிகொடுத்து ஆடிப் பாடி மகிழ்ந்திருந்த காட்சியை அங்கிருந்த வேம்பு மரநிழலில் பெண் மூதாட்டி ஒருத்தி பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தின் பின் அந்தப் பெண் மூதாட்டி மாயமாக மறைந்தாள். கொம்பு விளையாட்டைப் பார்ப்பதற்கு கண்ணகை அம்மன் மானிடவடிவில் வந்து காட்சி கொடுத்ததாக எண்ணி ஊர் மக்கள் குரவை ஒலி எழுப்பி கண்ணகை அம்மனை வழிபட்டார்கள். அதனைத் தொடர்ந்து இவ் விளையாட்டினை தொடர்ந்து நடாத்தி வருகின்றார்கள்.



**நிகழ்த்தப்படும் முறைமை**

முதலில் வடசேரி, தென்சேரி என இரண்டு அணிகளாகப் பிரிந்து ஆலய முன்றலில் தேங்காய் உடைத்து அதனைத் தொடர்ந்து இரு அணிகளும் காட்டிற்குச் சென்று கொம்பு செய்வதற்குத் தேவையான மரத்தினை வெட்டிக் கொண்டு வருவார்கள். கொம்புகளை வீட்டில் உள்ள கிணற்றுக்குள் குறிப்பிட்ட சில நாள்களுக்கு வைப்பார்கள். பின்பு அதை எடுத்து செம்மைப்படுத்துவார்கள். அதனைத் தொடர்ந்து இரு அணிகளும் தங்களது கொம்பினை ஏடகம் பூட்டி வளைப்பார்கள். ஒரு அணி ஒரு திசையிலும் மற்றய அணி எதிர்த்திசையிலும் செல்லும் அச்சமயத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு அணிக்கு எதிராக பாடல்களைப் பாடி ஊரைச் சுற்றி வளைத்து வருவார்கள் அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் கொம்பு முறி நிகழ்வு இடம்பெறும். வெற்றிபெற்ற அணியினர் அதனைக் கொண்டாடும் வகையில் பொங்கல் பொங்கி மகிழ்வார்கள்

விளையாட்டினை நிறைவேற்றியதன் பின்னர் மழை வந்து பயிர்கள் நன்கு செழிப்பாக வளர்வதுடன் விளைச்சல் மேலோங்கும். கிராமமே செழிப்படையும். நோய்கள் நீங்கும் என கிராமவாசிகள் நம்புகின்றனர். கொம்புமுறி விளையாட்டு பாரம்பரியத்திற்காகவும் வேண்டுதலுக்காக மாத்திரமே நிகழ்த்தப்படாது மக்களின் ஒற்றுமையையும், பொது மக்களின் தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றதாகவும் மற்றும் பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் திகழ்கிறது. இந்த விளையாட்டின் மூலமாக பக்தர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை கடவுளிடம் நேரடியாக கொண்டு சேர்க்க முடியும் எனவும் நம்பினர். அதனால் இந்தச் சடங்கினை தொடர்ந்தும் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் நிகழ்த்தி வருகின்றனர்.

---

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

# நேர முகாமைத்துவத்தினூடாக நவீன யுகத்தை வெல்வோம் 9

மனிதனின் வாழ்வில் மிகவும் அவசியமானது நேரம். அதனை நாம் சிறப்பாக முகாமை செய்யும் போது வெற்றியை இலகுவாகவே பற்றிவிடமுடிகிறது. சிந்திக்கவில்லையென்றால் பரவாயில்லை நேரம் தன்போக்கில் கடந்து போய்விடும் இதற்கு எதுவும் செய்யாமல் இருந்தாலே போதுமானது. இவ்இயற்கையில் உள்ள அனைத்திற்குமே நேரம் வகுக்கப்பட்டுள்ளது.

பல வெற்றியாளர்கள், சவால்களைக் கடந்து நேரத்தினை தங்கள் சிந்தனைக்கு ஏற்ப கட்டமைத்து, அதன்பின்பே இறுதிநிலையை அடைந்திருக்கிறார்கள். இலகுவில் நேரத்தினை முழுமையாக நாம் கட்டுப்படுத்தி விடமுடியாது. அதற்கு நாம் பலவாறாகப் பயிற்சிபெறவேண்டும். பல்வேறு அனுபவங்களைப் பெறவேண்டும் என்பது யதார்த்தமானது. நேரத்தினை முகாமை செய்வதற்கு நேரத்தின் அருமையை, அதன் தேவையை, முக்கியத்துவத்தினை முதலில் நாம் உணர வேண்டும். இது இயற்கையின் நீதி. இதிலிருந்து யாரும் தப்பிவிடமுடியாது. இதனைப் பயன்படுத்துவதன் முறைக்கு ஏற்பவே வெற்றியும் தோல்வியும், உயர்வும் தாழ்வும், ஏற்படுகின்றன. நேரத்தினைச் சரியான முறையில் பின்பற்றாமையால் பல்வேறு விடயங்களினை நாம் இழந்திருப்போம். வெற்றியை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட வெற்றியாளர்கள் ஒவ்வொரு நாளிலும் நேரத்தைப் போதியளவு மிச்சப்படுத்தி தங்களுடைய வெற்றிப் பயணத்திற்குள் அதனை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

நாம் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாத பொக்கிசமான நேரத்தினை நாம் வெற்றிக்கு, அதனைவிட பயனுள்ள வாழ்க்கைக்கு செலவழிப்போமாக இருந்தால் நாம் பிறந்ததற்கான பயனை மேற்கொள்கின்றோம் என்று பொருள் கொள்ளலாம். எனவே நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டு நீங்கள் நினைத்த எந்தவொரு வெற்றியையும், வாய்ப்பையும் அடைந்திடுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வவுனியாவில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா

பா.குமுதன்



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா வவுனியா கலைஞர் 'ஆ.விஜயநாதன்' அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

நாதநர்த்தனாலய கலையகத்தின் வாத்திய பிருந்தா கீர்த்தனாலயா இசைக்கூடம் வழங்கிய தமிழிசைப் பாடல்கள், துஸ்யந்த கலாமன்றத்தின் கண்டியநடனம், முஸ்லிம் மகாவித்தியாலய மாணவிகளின் றபான் நடனம், ராகஸ்வரத்தின் மெல்லிசை என்பன நிகழ்வை மெருகூட்டின. விசேடமாக கலை இலக்கியப் படைப்பாக்கத் துறையில் ஆளுமைகளை வெளிப்படுத்திய கலைஞர்கள் 'வவுனியம் - 2024' விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அந்தவகையில் சிவகுமார் திவியந்தினி, ரஞ்சன்சம்சன், கருணாகரன் மதுசாரா, வல்லிபுரம் கந்தப்பு, ஜெயசிங்கம் சதுசன் ஆகியோர் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.



நன்றி உரையை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.திருலிங்கநாதன் நிகழ்த்தினார். நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் பி.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர்களான, இ.பிரதாபன், சுலோயனி குகன், கே.குமார, பண்பாட்டலுவல்கள் பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஜ், உதவிப்பிரதேச செயலாளர் கலாஞ்சலி அருணசாந்த மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

---

# அறிவுப் பொக்கிஷம் நிறைந்த அதிசய அறை நூலகம்

சி.இராணி
*நூலகர்*
*பொதுசனநூலகம்*

நாம் உயிர் வாழ உணவு எவ்வளவு முக்கியமோ அது போல் மனிதன் மனிதனாக வாழ கல்வி முக்கியம். படித்துப் பட்டம்பெறச் செய்து சமுதாயத்திலே ஒரு உயர்ந்த மனிதனாக உருவாக்கும் அந்தக் கல்வி பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலே ஆசிரியர்கள் வழியாக கிடைக்கிறது. வயிற்றுப் பசிக்கு வகை வகையான உணவு தானியங்களை பூமித்தாய் தருவதுபோல அறிவுப் பசிக்குத்தான் எத்தனை வகையான நூல்கள்! நூல்கள் பல பொதிந்து கிடக்கும் பொக்கிஷ அறை நூலகங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நூலகங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன நூல்கள், ஆலயங்களில் வரிசையாக அமர்ந்திருக்கும் விக்கிரகங்கள் போன்றன. நூலகம் ஒரு கோயில் அங்கு யாரும் வரலாம். ஜாதி மதம் என்ற பாகுபாடு இங்கு இல்லை. அறிவில் உதிக்கும் பல கேள்விகளுக்கு விபரமாக விலாவாரியாக விடை கிடைக்கும் இடம் நூலகம். இது அறிவு மலர் பூத்திடும் சோலை.

'நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பதற்கேற்ப நாம் எந்தளவுக்கு நூல்களின் மீது கவனம் கொள்கிறாயோ அந்த அளவே அறிவின் வளர்ச்சி அமையும். சிந்தைகள் தெளிவுற இலக்கிய இதழாக வரும் வார - மாத இதழ்கள் பிறமொழி படித்தவர்களுக்கான ஆங்கில இதழ்கள் என்று எண்ணற்ற இதழ்கள் நூலகங்களிலே விரிந்திருக்கும். தமிழ் இலக்கியம், வரலாறு, புவியியல், அறிவியல், பல அறிஞர்களின் பொன்மொழிகள், உலகப் பழமொழிகள் என எண்ணற்ற நூல்களைத் தாங்கி நிற்கும் நூலகம் நூறு ஆசிரியர்களுக்குச் சமம்.



இந்துக்களின் புராணங்கள், இதிகாசங்கள், இந்துமதத் தலைவர்கள், இஸ்லாமியர்களின் தத்துவங்கள், அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றியோரின் வரலாறு, கிறிஸ்தவர்களின் எண்ணற்ற நூல்கள் எனப் பரந்தளவிலான நூல்கள் காணப்படுகின்றன. மக்களிடம் தங்கள் சமயம் தான் மற்ற சமயங்களைக் காட்டிலும் உயர்ந்தது என்ற தவறான எண்ணத்தைத் தவிர்க்கும் வண்ணம் எல்லாச் சமயங்களைச் சார்ந்த நூல்களையும் தந்து ஒளி காட்டி வழிகாட்டுகிறது நூலகம். பாடசாலை, கல்லூரிகளில் படிப்பது மட்டும் படிப்பாகிவிடாது வாழ்க்கையை வளமுடன் வாழக் கற்றுக் கொள்வதற்குப் படிக்கவேண்டும். படிப்பெல்லாம் பணம் சம்பாதிக்க மட்டுமே! என்ற குறிக்கோளுடன் படித்தும் முட்டாள்களாய் பலர் வாழ்கிறார்கள். படிக்காத மேதைகளாய் சிலர் வாழ்கிறார்கள். படிக்காத மேதையாய் காமராசர் இந்தியாவின் தமிழ் நாட்டுக்கே முதல்வராகவில்லையா? அவர் பாடசாலை சென்று படிக்காவிட்டாலும் நிறைய நூல்களைப் படித்தார். இன்று பலரும் தங்களது நேரங்களை வீணடிக்கிறார்கள். நான்கு நண்பர்களுடன் சேர்ந்து நாற்சந்தியில் நின்று பொழுதைக் கழிக்கிறார்கள். தவறுகள் நிறைந்த கஸ்டமான பகுதியை கடந்து விட்டால் [illegible]யின் நம் வாழ்க்கை நிச்சயம் தீபமாக மிளிரும். எனவே சிறந்த நூல்களை தேர்ந்தெடுத்துக்கற்று வாழ்வில் தேர்ச்சி பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 05 . 1941



மறைவு
05 . 12 . 2024

## சிலுவைராஜா திரேசம்மா (வேவி)

அன்னார் காலம் சென்ற மனவல் சிலுவைராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்றவர்களான செல்லத்துரை மரியம்மா அவர்களின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான சிவலை அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா அவர்களின் உற்ற மருமகளும் காலம் சென்றவர்களான ஜேக்கப் மனவல், விக்ரோறியா அவர்களின் அன்பு மருமகளும் காலம் சென்ற ஜோண், காலஞ்சென்ற தேவதாஸ், காலஞ்சென்ற றாணி, பூமணி, காலம் சென்ற ராசேஸ்வரி, றெஜினோல்ட், காலஞ்சென்ற புஸ்பராணி, சின்னராணி, பிறேமன் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற செல்வம், ராணி, காலஞ்சென்ற றதி, பிறேமா, யோகம், றகு ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சின்னத்தங்கம், காலஞ்சென்ற செல்வராணி, காலஞ்சென்ற அல்போன்ஸ், காலம் சென்ற சிங்கராஜா, யோகம், காலஞ்சென்ற பிலோமினா (பட்டு), கோணேஸ்வரி, ஸ்ரெலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

சூரியகுமாரி, பெலிசிற்றஸ், குவான்ஸ் (றோய்), மாவீரர் கிருமானி-ஜோண்சன், றஜனி, ஜன்சன், பெலிஸ்ரன், அருட்பணி, அருள் சுதர்சன் அமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தன், காலஞ்சென்ற எட்மன் ஜோசவ், டொறின், ஜோசவ் கப்றால், நிக்க்ஷிலா, றோகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் மகுமதி(தர்மினி), சிவதீஸ், கிருபாளினி, ரவிக்குமார், துஷாறா, கர்ஷன், யூடின், மாமதி, றொசிற்றா, தொபியாஸ், ஆகாஸ், மொறிஸ், ஜனனிக்கா, கிருமானி, ஜொகானா, ஜென்சிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அன்சிகா, ஷிவாணி, மானவ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 12.12.2024 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணியளவில் 20/4 சென் ஜேம்ஸ் மேற்கு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 628 6506**

(CS 43866) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1948



மறைவு
10 . 12 . 2024

## அமரர் தெய்வானைப்பிள்ளை சிவகடாட்சம்

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தெய்வானைப்பிள்ளை சிவகடாட்சம் நேற்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகடாட்சம் (ஓய்வு நிலை தபால் அலுவலகர்-துணுக்காய், வவுனிக்குளம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவலோகநாயகி (பரிசாரகர்-பிரதேச வைத்தியசாலை கொடிகாமம்), சிவசுமதி, சிவரூபன் (ரூபன் எலக்ரிக்கல்-கொடிகாமம்), சிறீகரன் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசசுகுமார் (பாபு), கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், இராசலட்சுமி, மகேஸ்வரி மற்றும் நேசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்ப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
மகள் (லோஜி)- 077 401 8364
மகன் (ரூபன்)- 077 635 1876
மகன் (கரன்)- +61415662315

**வெள்ளாம் போக்கட்டி**
**கொடிகாமம்.**

(CS 436) V-1

# மரண அறிவித்தல்



## தம்பையா தங்கராஜா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தங்கராஜா அவர்கள் நேற்று முன்தினம் (09.12.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமளவல்லி (குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும் காசினி, தரணீதரன், பிரியதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன், விஸ்னுகா, ஜெசிந்து ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஸ், தருண், அயிரா, மெல்லினா, ஜெயனன், அஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சிவசுப்பிரமணியம், நடராஜா மற்றும் இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் (பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்தும் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 912 4049**
**078 263 1014**

**பழைய தபாற் கந்தோர்,**
**சித்தன்கேணி**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 30.07.1957 மறைவு : 23.11.2023

திதி - ஏகாதசி

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் இராமலிங்கம் ஞானசேகரன்

(முன்னாள் வர்த்தகர் திருநெல்வேலி, M.G.R-C.D கடை உரிமையாளர்)

அப்பா அப்பா அப்பாக்குட்டி—என்று
அலறும் போதிலும்—நீங்கள்
தொட்டுணரா தொலை தூரத்தில்
நினைவுகள் மலர்கின்றன—அவை
மொட்டாகி மலராகி உதிர்கின்றன—உங்கள்
அன்பான தொடுகையின்றி................
ஆயிரம் உறவுகள் அருகில் – ஆனால்
அர்த்தம் புரியாத புதிராகிறது—வாழ்க்கை
ஓர் நாள் ஒன்றிணைவோம் ஒரு கூட்டில்—உங்கள்
மடியில் மழலைகளாய் தவழ்வதற்காய்...............

தகவல்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாடகைக்கு**

கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.

A-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி

T.P :- S.Sivakaran 077 448 1433

CS/55378) J-1



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இளைஞர்களின் உரிமைகளை வலியுறுத்தி மன்னாரில் நேற்று விழிப்புணர்வு நாடகமொன்று ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது. (அ-ம-56)

# INVITATION FOR BID (IFB)

## Provincial High Court Northern Province, Jaffna

## Procurement of Cleaning and Sanitary Services - 2025

1. The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna now invites sealed bids from eligible and qualified bidders, who have at least service station or branch in Jaffna District, for the service mentioned below in the schedule.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. Interested bidders may obtain further information from the Procurement Unit, Provincial High Court, Jaffna (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from 9.00 a.m to 3.00 p.m from 11.12.2024
   Contact numbers are
   **Phone : 0212222582/0212226388**
   **Facsimile : 0212222582/0212226388**
4. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the Procurement Unit, Provincial High Court, Jaffna from 11.12.2024 to 30.12.2024 from, 9.00 a.m to 3.00 p.m upon the payment of a non-refundable fee as described in the schedule below.
5. Scaled bids shall be sent by registered post addressed to the The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court Jaffna on or before 31.12.2024 4.00 p.m. Late bids will be rejected. Bidders should write the service description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at 4.00 p.m. on the same day (31.12.2024) in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
6. Bid shall be valid for a period of 77 days from the last date (31.12.2024) fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for 105 days from the bid opening.
7. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
8. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/ Serv. (Clean)/01/2 024 | Cleaning Service for Courts Complex Jaffna | 4.7 | 25000/- | 15.04.2025 | 2000/- |
| 02 | HCJ/PROC/ Serv. (Clean)/02/2 024 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 3.1 | 25000/- | 15.04.2025 | 2000/- |
| 03 | HCJ/PROC/ Serv. (Clean)/03/2 024 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 2.3 | 25000/- | 15.04.2025 | 2000/- |
| 04 | HCJ/PROC/ Serv. (Clean)/04/2 024 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavakachchery | 2.4 | 25000/- | 15.04.2025 | 2000/- |
| 05 | HCJ/PROC/ Serv. (Clean)/05/2 024 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 2.6 | 25000/- | 15.04.2025 | 2000/- |
| 06 | HCJ/PROC/ Serv. (Clean)/06/2 024 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1.1 | 25000/- | 15.04.2025 | 2000/- |

9. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on 23.12.2024 at 9.00 a.m.

**The Chairman,**
**High Court Procurement Committee**
**Provincial High Court, Northern Province, Jaffna**

(CR/43813) J-1

## மணல் கடத்திய டிப்பர் கைதடியில் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.11

பருத்தித்துறையிலிருந்து மணல் கடத்தப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பரை விசேட அதிரடிப்படையினர் மடக்கிப்பிடித்துள்ளனர்.

குறித்த டிப்பர் கொடிகாமம் ஊடாக மந்துவில் பகுதியால் தப்பிச் சென்றுகொண்டிருந்தவேளை மண்ணை வீதியில் கொட்டிவிட்டு, சாவகச்சேரி- கைதடி வீதியால் செல்லும்போது அவ்விடத்தில் வைத்து டிப்பருடன் சாரதி மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

சந்தேகநபர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்துவதற்கு சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-45-27)

## 'கிளப்' வசந்த கொலை எண்மருக்குப் பிணை

கொழும்பு, டிசெ. 11

கிளப் வசந்த என்று அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 8 சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்ய ஹோமாகம மேல் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

எட்டு சந்தேக நபர்களும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள எட்டு சந்தேகநபர்களுக்கும் வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 'தமிழ் அறிவு' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.11

காவேரி கலாமன்றம் மற்றும் தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடத்திய, மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய 'தமிழ் அறிவு' நூல் வெளியீட்டு விழாவானது பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நினைவுப் பேருரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸும், நூலின் ஆய்வுரையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் ஆற்றியிருந்தனர். நூலின் முதற் பிரதியை பேராசிரியர் ரட்ணஜீவன் எச்.ஹூல் வழங்கிவைக்க பேராசிரியர் அ.சண்முகதாஸ் அதனைப் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் காவேரி கலா மன்றத்தினர், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை கோரல்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த நடராசா சுகுமாரனும், சுகுமாரன் தருமபாலினியும் ஆகிய நாங்கள் சொந்த வீடற்ற துரைராசா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிருஸ்ணன் மகிந்தகுமார் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு பழனி குகனேஸ்வரன் முகதாவில் 2020ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி 4103ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு J/312 இற்குட்பட்ட 66 "பாணன் குடா வளவு" என்ற நிலப்பரப்பு 1 விஸ்தீரணமுடைய ஆதனத்தை நன்கொடையாக வழங்கியிருந்தோம். ஆனால் குறித்த நன்கொடையை பெற்ற கிருஸ்ணன் மகிந்தகுமாரோ அவரது அடுத்துறுபவர்களோ எங்குள்ளனர் என்ற விபரம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்றும் ஆதனத்தின் ஆட்சியும் இதுவரையிலும் பேரம்பலம் ஞானகுமாருக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கவுமில்லை.

மேலும் குறித்த ஆதனத்தை பிறிதொருநபருக்கு தற்போது உரித்து மாற்றம் செய்ய விருப்பதனால் இவ்வாதனத்தின் உரித்தாளரான கிருஸ்ணன் மகிந்தகுமாரோ அவரது அடுத்துறுபவர்களோ இது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் அறியத்தரலாம் என்பதயும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரைவு
பரமானந்தன் திலக்சனா (சட்டத்தரணி)
சுகுமாரன் தருமபாலினி
076 451 0979.

# உரிமை கோரல்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த நடராசா சுகுமாரனும், சுகுமாரன் தருமபாலினியும் ஆகிய நாங்கள் சொந்த வீடற்ற வசந்தநகர், திருமுறிகண்டியைச் சேர்ந்த பேரம்பலம் ஞானகுமார் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு பழனி குகனேஸ்வரன் முகதாவில் 2020ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி 4102ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு J/312 இற்குட்பட்ட பாணன் குடா வளவு" என்ற நிலப்பரப்பு 1 விஸ்தீரணமுடைய ஆதனத்தை நன்கொடையாக வழங்கியிருந்தோம். ஆனால் குறித்த நன்கொடையை பெற்ற பேரம்பலம் ஞானகுமாரோ அவரது அடுத்துறுபவர்களோ எங்குள்ளனர் என்ற விபரம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்றும் ஆதனத்தின் ஆட்சியும் இதுவரையிலும் பேரம்பலம் ஞானகுமாருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவுமில்லை.

மேலும் குறித்த ஆதனத்தை பிறிதொரு நபருக்கு தற்போது உரித்து மாற்றம் செய்ய விருப்பதனால் இவ்வாதனத்தின் உரித்தாளரான பேரம்பலம் ஞானகுமாரோ அவரது அடுத்துறுபவர்களோ இது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் அறியத் தரலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரைவு
பரமானந்தன் திலக்சனா (சட்டத்தரணி)
சுகுமரன் தருமபாலினி
076 451 0979
(CS/56879A J-1

# மாதர் சங்கங்களின் நிர்வாகசபைத் தெரிவு

கைதடி பிரதேச மாதர் சங்கங்களின் ஒன்றியத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு தற்காலிக தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி மைதிலி ஜெயபவான் தலைமையில் கைதடி மத்தி குமரநகர் வாசிகசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தலைவியாக திருமதி ம.நிர்மலா, செயலாளராக திருமதி ற.விகிதா, பொருளாளராக திருமதி மு.தயாநிதி, உபதலைவியாக திருமதி மு.சந்திரவதனி, உபசெயலாளராக திருமதி ஜெ.மைதிலி, உறுப்பினர்களாக திருமதி ப.அ ஜந்தா, திருமதி சி.கவிதா, சி.ஜெனனி, திருமதி சி.ரூபினி, திருமதி ர.கோமா, திருமதி சரஸ்வதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-45-159)

# மதுபாவனையிலிருந்து விடுபடச் செயற்றிட்டம்

மதுபாவனையிலிருந்து சமூகத்தை மீட்டெடுக்கும் நோக்குடன் 'மதுபாவனையிலிருந்து சமூகத்தை விடுதலை செய்தல்' எனும் செயற்றிட்டம் மனித உரிமைகளுக்கான நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் கலந்துரையாடலொன்று விரைவில் நடத்தப்படவுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 0770847133, 0774687069, 0770870414 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் மனித உரிமைகளுக்கான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. (ச-33-66)

# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 08 . 1955



இறப்பு
10 . 12 . 2024

## விக்கினேஸ்வரன் புஷ்பகாந்தா

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரன் புஷபகாந்தா அவர்கள் நேற்று (10.12.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (முன்னாள் தபால் சேவையாளர், நில அளவையாளர், ஜோதிடர்) - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோப்பாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவரான விக்கினேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும், பார்த்தீபன் அவர்களின் பாசமிகு தாயாரும், விதாஜினியின் அன்பு மாமியாரும், சஷ்திக், முகிலினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சத்தியதாசன் (முன்னாள் அதிபர், நாரந்தனை றோ.க.ம.வி - பிரான்ஸ்), சிவசக்தி (சுவிஸ்), உமாகாந்தா (பிரான்ஸ்), சிவகுமார் (லண்டன்), லிங்கேஸ்வரி (சுவிஸ்), இராஜேஸ்வரி (ஸ்கொட்லண்ட்), இரத்தினேஸ்வரி (ஜேர்மனி), விக்னேஸ்வரி (கொழும்பு), மணிவண்ணன் (நாரந்தனை), தேவதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இந்திரா, பரமேஸ்வரன், வைரவநாதன், யசோதா, வர்ணகுமார், டேவிட்ராஜா காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் விஜயகாந்தன், ஜெயந்தி, ஜெயகௌரி, நீலகேசி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இணுவில் மேற்கு ராஜ்மோகன் - கலாநிதி தம்பதியரின் சம்பந்தியும், செந்தூரன், காயத்திரி, பிரியதர்சினி, யதுநாத், யதுசா, ஆரணி, மணிமாறன், வைஷ்ணவி, கவிஜுகி ஆகியோரின் அத்தையும், கஸ்தூரி, கார்த்திக ஆகியோரின் சிறிய தாயாரும், சஞ்ஜெயன், சங்குகன், சாரங்கன், சங்கீதா, சாலினி, சிவமேகன், சிவகாமி, விஜயசாங்கவி, விஜயசுஜித், விஜயசஜனுகி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணியளவில் சரவணை புன்னைமலர்ப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
பார்த்தீபன் - மகன்
Whatsapp - 076 678 7525, 075 838 2378
மணிவண்ணன் - 076 485 9953
சிவகுமார் - 0044 794 913 1661
சத்தியதாசன் - 0033 629 236 914

சரவணை மேற்கு,
வேலணை.
(CS/56877) J-1

# 2025 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம்
## வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை
## வவுனியா மாவட்டம்

2025 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 169 இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக. 11.12.2024 ஆம் திகதி தொடக்கம் 26.12.2024 ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை எமது அலுவலகம் மற்றும் பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

2025ம் ஆண்டு வரைவு வரவுசெலவுத்திட்ட அறிக்கை

| | | |
|---|---|---|
| வருமானம் | | |
| சபையின் சொந்த வருமானம் | 36.787.200.00 | |
| வருமான நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | 64.463.920.43 | |
| மூலதனப் பெறுகைகள் | 10.006.300.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | 111.257.420.43 |
| செலவினம் | | |
| மீண்டெழும் செலவுகள் | 96.194.520.43 | |
| மூலதன செலவுகள் | 15.062.100.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | 111.256.620.43 |

ச.கிருபாகரன்
செயலாளர்
வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.
11.12.2024
(CR/43863) J-1

# யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
## சிற்றுண்டிச்சாலை கேள்வி மனு கோரல் - 2025

யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சிற்றுண்டிச் சாலை 2025 ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கு பொருத்தமான ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றன. சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரலின் போது அதற்கான கேள்வி மனு சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி மனுகோரலின் போது ஒரு விண்ணப்படிவத்துக்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூபா 1000.00 (அரசவரி உட்பட) பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 10.12.2024 தொடக்கம் 13.12.2024 வரை மு.ப 9.00 12.00 மணி வரை உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று 23.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபாலில் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிற்றுண்டிச் சாலையை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் 2024 எனக் குறிப்பிடல் வேண்டும்.

ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் கேள்வி கோரல் மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தலைவர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
யாழ்ப்பாணம்.
(CR/43862) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்மக்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த 33 வயதான பெண் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். அவருடைய மாதிரிகளும் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அறிக்கைகள் கிடைத்த பின்னரே இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் உறுதியாகத் தெரியவரும்.

இதைவிட, மார்மக் காய்ச்சல் அறிகுறிகளுடனும், சடுதியான சுகவீனத்துடனும் வடக்கு மருத்துவமனைகளை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மந்திகை ஆதார மருத்துவமனையில் மட்டும் தற்போதுவரை 30 பேர் மார்மக் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்கா கச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரின் உடல்நிலை தொடர்பிலும் தீவிரமான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிலரின் உடல்நிலை சடுதியாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் நேற்று இரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

**மருத்துவத் துறை கூறுவது என்ன?**

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அத்துடன், வேறுசில விலங்குகளின் மலத்தொற்றாலும் இவ்வாறான நோய்நிலை ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன. எனவே, பொதுமக்கள் தமது சுகாதாரம், குடிதண்ணீர் ஆரோக்கியம் என்பவற்றில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். திடீர் காய்ச்சல் மற்றும் சடுதியான சுகவீனம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடவேண்டும் என்று மருத்துவத் துறையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (அ-ம-26)

## ஒருநாள்...

வடமராட்சிப் பகுதியில் கடந்த 3 தினங்களுக்குள் 4 பேர் காய்ச்சலுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையிலேயே, ஒருநாள் காய்ச்சல் ஏற்பட்டாலும், உதாசீனமாக இருக்காமல் மருத்துவமனையை நாடுமாறு பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:-

இந்தக் காய்ச்சல் Laptospira interrogans எனப்படுகின்ற ஒரு வகை பக்ரீரியாவால் ஏற்படுகிறது. இந்த நோய்க் கிருமி பொதுவாக மிருகங்களின் (எலி, ஆடு, மாடு, பன்றி) சிறுநீருடன் வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட நோய்க் கிருமி நீர்த் தேக்கங்களிலிருந்து மனிதனின் தோலில் உள்ள சிறு புண்கள் ஊடாகவோ அல்லது தோலின் மென்மையான பகுதிகள் ஊடாகவோ மனித உடலின் குருதிச்சுற்றோட்டத்தைச் சென்றடைகின்றது. சில சந்தர்ப்பங்களில் இந்த நோய்க் கிருமி உள்ள நீரைப் பருகுவதாலும் மனித உடலைச் சென்றடைகின்றது. தற்போது மழைக்காலம். வெள்ளத்தின் காரணமாக வயல்நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள், வடிகால்களைச் சுத்தம் செய்பவர்கள், சுரங்கங்களில் வேலை செய்பவர்கள், சதுப்பு நிலங்களில் பணியாற்றுபவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் அருகிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரியை அணுகவும் - என்றுள்ளது. (அ-ம-66)

## ரயில்...

இந்தியா 22 ரயில் இயந்திரங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவுள்ளது.

ரயில் இயந்திரங்களுக்குத் தேவையான 5 வருடகால பராமரிப்புப் பணியையும் இந்தியா வழங்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் கைச்சாத்தான ஒப்பந்தத்துக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-6)

## இந்தியப்...

எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தப் பயணத்தின்போது, இந்தியப் பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பில் ஈடுபடவுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடன், வெளிவிகார அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரும் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## காணாமலாக்க...

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர், யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு முன்பாக நேற்றுக் மு.ப. 10 மணியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்துக்கு எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறையையும் நாம் ஏற்கப் போவதில்லை. சர்வதேச விசாரணையொன்றே எமக்குத் தேவை என்று போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் வலியுறுத்தினார்கள்.

**மன்னார்**

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் ஏற்பாடு செய்த போராட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

'காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நாம் கடந்த 15 வருடங்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். ஆனால், எமது கோரிக்கைகள் அரசாலும், சர்வதேசத்தாலும் செவிமடுக்கப்படவில்லை. சர்வதேசமும் எங்களின் துயரத்தைப் பாராமுகமாக இருக்கின்றதா?' என்று மன்னாரில் போராட்டத்தை மேற்கொண்ட உறவினர்கள் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்துகொண்டார்.

**வவுனியா**

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக வவுனியாவிலும் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றன. வவுனியா கந்தசாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்தப் பேரணி, பஜாரு பேருந்துத் தரிப்பிடத்தில் முடிவடைந்தது. தாய்மார் தலையில் தீச்சட்டியை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினைக்கு அரசாங்கம் விரைந்து தீர்வைத் தரவேண்டும். தமது உறவுகளைத் தேடி அவர்களுக்காகக் குரல்கொடுத்து வந்த தாய்மார், தந்தைமார் என 300 பேர் தமது உறவுகளைக் காணாது உயிரிழந்துள்ளனர். இனி அவர்களின் உறவுகளை யார் தேடுவது? அவர்களுக்கான நீதியை யார் நிலைநாட்டுவது?' என்று வவுனியாவில் போராட்டம் நடத்திய உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

**முல்லைத்தீவு**

காணாமலாக்கப்பட்டவர்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்திலும் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு நகர சுற்றுவட்ட வீதியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாகவும், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்பட்டு நேற்றையதினம் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அத்துடன், கிழக்கிலும் பல பகுதிகளில் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(அ-ம-125-110-56-66-26-113-20-18)

## மின்கட்டணத்...

தீர்மானம் ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் இறுதி செய்யப்படும் என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவிப்பில் உள்ளதாவது:-

மின்கட்டணத் திருத்தம் குறித்து இலங்கை மின்சாரசபை முன்வைத்துள்ள பரிந்துரைகளை முழுமையாக பரிசீலனை செய்து வருகின்றோம். மின்னுற்பத்தி தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தரவுகளை மீள்பரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளோம். மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் துறைசார் நிபுணர்கள் மற்றும் பொதுமக்களின் அபிலாசைகள் கோரப்படும். இதனைத் தொடர்ந்து மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் வாரத்தில் உறுதியான தீர்மானம் அறிவிக்கப்படும் என்றுள்ளது.

இதேவேளை, ஜனவரி மாதம் மின்கட்டணம் குறைக்கப்படாவிட்டால், நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று மின் பாவனையாளர் சங்கம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## மின்சார...

எரிசக்தித் துறையில் தற்போதைய மற்றும் எதிர்காலத் திட்டங்களின் நிலைத்தன்மையை உறுதிசெய்ய இந்த நிதியுதவி உதவும் என்று தனது அறிக்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை மின் 70 வீதமான மின்சார உற்பத்தியை புதுப்பிக்கத்தக்க மூலாதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை அடைய உரிய வேலைத்திட்டங்களை இலங்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவுறுத்தியுள்ளது. (அ-ச-இ)

## வடக்கில்...

நேற்று மாலை வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் மிதமானது முதல் கனமானது வரையிலான மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. (அ-ம-இ)

## உணவுப்...

மற்றும் போஷாக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் நியாயமான விலையில் உணவைப் பெற்றுக்கொடுத்தல் என்பன அரசாங்கத்தின் பிரதான பணிகள் என்ற அடிப்படையில், உணவுப் பாதுகாப்புக் குழுவை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அநுரவால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டுக்குள் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவு வகைகளையும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல், குறைந்த பட்சம் 3 மாதங்களுக்கு போதிய உணவு இருப்பை உறுதிப்படுத்தல், நாட்டிலுள்ள உணவுத் தொகை தொடர்பில் தகவல் கட்டமைப்பொன்றை நடத்திச் செல்லல், உணவுப் பாதுகாப்புக்குத் தேவையான உற்பத்திகள், களஞ்சியம், விநியோகம் ஆகிய விடயங்களுக்காக தனியார் துறையின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு பயனுள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் என்பனவே இந்தக் குழுவின் முதன்மைப் பணிகளாகும். (அ-ம-44)

## ஊழல்...

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரசேகர மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன ஆகியோருக்கு அமெரிக்கா நேற்றுப் பயணத்தடைகளை விதித்துள்ளது.

இந்தத் தீர்ப்பை வரவேற்றுள்ள அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ, மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம். விசாரணைகளை மேற்கொள்ளும்போது ஊழல்வாதிகள் கூச்சலிடுகின்றனர். அந்தக் கூச்சலுக்கு அச்சமடைபவர்கள் நாங்கள் அல்லர்.

உதயங்க வீரசேகர மற்றும் கபில சந்திரசேன ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் எமது விசாரணையை இலகுபடுத்தியுள்ளன. தாம் ஊழல்வாதிகள் அல்லர் என்று தெரிவித்தவர்கள் தற்போது எவ்வாறான கருத்துகளை வெளிப்படுத்தவுள்ளனர்? என்று கேட்க விரும்புகின்றேன்.

அரசாங்கம் என்ற ரீதியில் இவர்களுக்கு எதிராகக் கடுமையான முறையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கடந்த காலங்களில் தம்மை நிரபராதிகள் என நிரூபிக்க முற்பட்டவர்களுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தீர்ப்பு சிறந்த பாடமாகும் - என்றார். (அ-ம-இ)

(தொடர்புடைய செய்தி பக்: 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி விற்பனைக்கு
மணியகாரர் லேன், கொக்குவில் கிழக்கில் 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தவிர்க்கவும்)
தொடர்பு:- 076 067 6227
(CS/56873) J-1

# 31ம் ஆண்டில் பிரார்த்தனைகள்

தாயின் மடியில் 26 . 09 . 1929

ஆண்டவன் அடியில் 27 . 11 . 1993



## சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர், R.M.C - RDA)

திதி : பூர்வபக்க ஏகாதசி

ஆண்டுகள் முப்பது கடந்தன
முடிவில்லா நினைவுகள் தொடர்ந்தன
வாழ்க்கையின் அர்த்தங்கள் புரிந்தன
வாடிடும் உள்ளங்கள் தளிர்த்தன
தந்தையின் கூற்றுக்கள் உயர்ந்தன
தரணியில் நாம் வாழ சிறந்தன.

"இன்பகம்"
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS/56872) J-1

குடும்பத்தினர்

# 'நான் பார்த்த நந்திக்கடல்' நாவல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.11

மாவட்ட கலாசாரப்பேரவையின் ஏற்பாட்டில், முல்லை பொன்.புத்திசிகாமணியின் 'நான் பார்த்த நந்திக்கடல்' நூல் வெளியீடு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில், பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலனும், ஏற்புரையை பொன். புத்திசிகாமணியும் ஆற்றுவர். சிறப்புரையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் ஆற்றுவார். நிலக்கிளி நாவலாசிரியர் அ.பாலமனோகரன், ஒட்டுசுட்டான் அதிபர் சி.நாகேந்திரராசா, முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், ஓய்வுபெற்ற அதிபர் அ.இருதயநாதர், கரைதுறைப்பற்று ஓய்வுநிலை பதில் நிர்வாக உத்தியோகத்தர் அன்ரனி அந்தோனிப்பிள்ளை, முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்னாள் உத்தியோகத்தர் சேதுபதி ஜெயந்தி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

(ச-25, 10)

வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை
யாழ் நகரில் இயங்கும் வர்த்தக ஸ்தாபனத்திற்கு கணினி அறிவுள்ள. O/L அல்லது A/L படித்த பெண்பிள்ளைகள் வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
077 122 1289


காணி விற்பனைக்கு
கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies பாடசாலைக்கும் இடையில் காணி விற்பனைக்குள்ளது.
(சைவ மதகுருக்கள்/ ஆலய சுற்றுப்புறச் சூழலை விரும்புவர்களுக்கு பொருத்தமான காணி)
➤ 1 1/4 பரப்பு
➤ சுற்று மதில்
➤ குழாய்க்கிணறு
விலை -: 3 கோடியே 10 லட்சம்
தொடர்புகளுக்கு:
076 772 5781, 077 229 0303

விற்பனைக்கு உண்டு
பயன்படுத்தப்பட்ட Cold Room Unit விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 076 444 2879
(CS/56874) J-1

# மரண அறிவித்தல்

## செல்லப்பா செல்வராசா

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், சமாதான நீதவான், முன்னாள் தலைவர் - கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நெல்லியடி, மத்தியஸ்த சபை உறுப்பினர், பணிப்பாளர் - கணபதி அறக்கட்டளை, அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஸ்தாபக தலைவர்.)



தோற்றம் 26.05.1936

மறைவு 08.12.2024

அல்வாய் தெற்கு. அல்வாயைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா செல்வராசா அவர்கள் கடந்த (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (ஆசிரியர்) - செல்லாச்சி தம்பதியரின் புதல்வனும்.காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். மனோன்மணியின் பாசமிகு கணவரும். மணிச்செல்வன் (சுவிஸ்). மணிச்செல்வி. சிவச்செல்வன் (அவுஸ்ரேலியா). சுபச்செல்வன் (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலகம் - பருத்தித்துறை). ஞானச்செல்வன் (இரசாயனவியல் ஆசிரியர் - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும். தயாமதி (சுவிஸ்). தயாபரன் (இணைந்த கணித ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி). சுபாசினி (அவுஸ்ரேலியா). செந்திலி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி). கார்த்திகா (ஆசிரியை - யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். விபூஜா (MSc - Mechanical Engineering - சுவிஸ்). வினுஜா (MSc - Pharmacy - சுவிஸ்). டிலக்சனா (பல்கலைக்கழக மாணவி - யாழ்ப்பாணம்). சோபிசன். வினுஜன் (அவுஸ்ரேலியா). தக்சன் (அவுஸ்ரேலியா). டிலக்சன். சுலக்சன். திலக்சன். அனுக்சன். கிருத்திகன். விபுசனா ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்றவர்களான நடராசா. தவமணி. துரைராசா (அதிபர்). தங்கராசா (அதிபர்). தயாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (அதிபர்). மனோன்மணி (ஆசிரியை). சுப்பிரமணியம். பாக்கியம். கனகம்மா. அருந்தவநாயகி. சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதுத்தோட்டம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(CS/28747) J-1

தகவல்:
குடும்பத்தினர்.
021 226 3680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...: 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   மின்: news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை. ந... உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.